மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று கேட்கும்போது, இந்நிகழ்ச்சி குறித்து எந்த விதத்தில் சட்டமன்ற விதிமுறைகளை மீறியிருக்கிறது? எந்த முறையில் சட்டமன்ற மரபுகள் கைவிடப்பட்டிருக்கின்றன என்பதைத்தான் சொல்ல வேண்டும். ஆகவே உறுப்பினர்கள் சட்டமன்ற விதிமுறைகளை நன்கு கடைப் பிடிக்க வேண்டும்.

திரு. க. இராமமூர்த்தி: தலைவர் அவர்களே, விதி 42-ன் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம் வருகிறது. பேரவைத் தலைவர் அவர்கள் சொல்கின்ற நேரத்தில், சட்டமன்ற உறுப்பினர் பொதுமக்கள் மத்தியில் இருக்கும்போது பொதுமக்களுக்கு என்ன நடக்கிறதோ அதுவேதான் அவர்களுக்கும் நடக்கும் என்று சொல்லி ஒத்தி வைப்புத் தீர்மானத்தை மறுத்திருக்கிறார்கள். அவர் செய்த ஒரே தவறு சட்டமன்ற உறுப்பினராக இருப்பதுதான். அவர் பொது மக்களிலிருந்து பிரிக்கப்பட்டு அடிக்கப்பட்டிருக்கிறார்.

THIRU J. JAMES: Rule 50, sub-rule (8) provides that a matter to be discussed must involve more than administration of law. My adjournment motion is . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதெதற்கு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரலாம் என்பதற்கு விதிமுறைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. எந்தெந்த நிகழ்ச்சியை இங்கே மேற்கொள்ள லாம் என்று சொல்கிற நேரத்தில் . . .

THIRU J. JAMES: Since it involves more than administration of law, I have given notice of the adjournment motion. You are bound to give us an opportunity . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த நிகழ்ச்சியை இங்கே மேற்கொள்ளலாம் என்று சொல்கிற நேரத்தில்,

the matter to be discussed must involve more than administration of law

என்று இருக்கிறது. இந்த விதிமுறை எங்கேயும் மாறவில்லை. எந்த நிகழ்ச்சியை ஒப்பிட்டுப் பார்ப்பது என்பதெல்லாம் பேரவை தலைவருக்குத்தான் உரிமை உண்டு.

(இ) வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள், வாழ்க்கைச் செலவுப் புள்ளி 30 ஆக உயர்ந்திருக்கிற தென்றும், இது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை யென்றும் கூறி, இப்பேரவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். வாழ்க்கைச் செலவுப் புள்ளி ஒரே நேரத்தில் 30 ஆக உயர்ந்துவிடுவதில்லை. சிறுகச் சிறுகத்தான் உயரும். இதைப்பற்றியெல்லாம் நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இதற்கும் அனுமதி மறுக்கிறேன்